Chennai Metro Rail Limited

# சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்

**செய்தி வெளியீடு**

## மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கோயம்பேட்டிலிருந்து அசோக் நகர் வரை உயர்த்தப்பட்ட இரயில் பாதை கட்டுவதற்கான தாங்கு உருளைகள் (Piling work) அமைக்கும் பணிகளை 10.06.2009 அன்று தொடங்கிவைத்தார்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தில் கோயம்பேட்டிலிருந்து அசோக் நகர் வரை அமைக்கப்படும் உயர்த்தப்பட்ட இரயில் பாதை கட்டுவதற்காக, தூண்கள் அமைப்பதற்கு முன்பாக தாங்கு உருளைகள் (Piling work) அமைக்கும் பணியினை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இயந்திரத்தை இயக்கி இன்று (10.06.2009) பணிகளைத் தொடங்கிவைத்தார்கள்.

சென்னையில் மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்த தமிழக அமைச்சரவை ஜூன் 2006ல் முடிவெடுத்தது. இத்திட்டம், விரைவான, நம்பத்தக்க, வசதியான திறன்மிக்க, நவீன மற்றும் சிக்கனமான பொது போக்குவரத்து அமைப்பாகவும், பெருகி வரும் போக்குவரத்து தேவைகளுக்கு ஒரு நீண்டகால தீர்வாகவும் அமையும். இத்திட்டம் குறித்து ஒரு விரிவான திட்ட அறிக்கையினை தயாரிக்க அரசு ஆணையிட்டதைத் தொடர்ந்து, இப்பணி டெல்லி மெட்ரோ இரயில் கழகத்திடம் அளிக்கப்பட்டது. இத்திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் ''சிறப்பு முயற்சி'' திட்டமாக அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் தற்பொழுது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் மாற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை 01.11.2007 அன்று சமர்ப்பிக்கப்பட்டு, 07.11.2007 அன்று தமிழக அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் என்கிற சிறப்பு வகை பொதுத்துறை நிறுவனத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கி இந்திய கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 03.12.2007 அன்று பதிவு செய்துள்ளது.

இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.14,600 கோடி (விலைவாசி உயர்வு, மத்திய அரசின் வரிகள் மற்றும் கட்டுமானக் காலங்களில் ஏற்படும் வட்டி உட்பட, ஆனால் மாநில அரசின் வரிகள் மற்றும் மாநில அரசின் காலி நிலங்களுக்கான விலை நீங்கலாக). இத்திட்ட செலவில் 59 சதவீதம் ஜப்பான் அரசின் அனைத்து நாடுகள் கூட்டுறவுக்கான அமைப்பின் நிதி உதவி (ODA) மூலம் மேற்கொள்ளப்படும். கடன் வழங்குவதற்கான ஒப்பந்தம் மத்திய அரசுக்கும் ஜப்பான் அரசுக்கும் இடையே 21.11.2008 அன்று டோக்கியோ நகரில் கையெழுத்தானது.

மத்திய அரசு திட்ட செலவில் 15 சதவீதத்தை பங்குத் தொகையாகவும், 5 சதவீதத்தை கடனாகவும் வழங்கும். பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு 28.01.2009 அன்று நடைபெற்ற கூட்டத்தில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தில் முதற்கட்டமாக இரண்டு வழித்தடங்கள் அமைக்கப் படவுள்ளன. அவற்றின் ஒட்டுமொத்த நீளம் 45 கி.மீ ஆகும். இதில் சுமார் 24 கி.மீ சுரங்கப்பாதையாகவும் மீதமுள்ள பகுதி உயர்த்தப்பட்ட பாதையாகவும் இருக்கும்.

முதல் வழித்தடம் வண்ணாரப்பேட்டையிலிருந்து அண்ணா சாலை வழியாக விமான நிலையம் வரை அமைக்கப்படும். இதன் நீளம் 23.1 கி.மீ ஆகும். வண்ணாரப்பேட்டையிலிருந்து சைதாப்பேட்டை வரை சுரங்கப்பாதையாகவும், மீதமுள்ள பகுதி உயர்த்தப்பட்ட பாதையாகவும் அமைக்கப்படும்.

இரண்டாவது வழித்தடம் சென்னை சென்ட்ரலில் இருந்து அண்ணா நகர், கோயம்பேடு வழியாக புனித தோமையார் மலை (St.Thomas Mount) வரை அமைக்கப்படும். இதன் நீளம் 22 கி.மீ ஆகும். சென்னை சென்ட்ரலில் இருந்து அண்ணா நகர் வரை சுரங்கப்பாதையாகவும் மீதமுள்ள பகுதி உயர்த்தப்பட்ட பாதையாகவும் அமைக்கப்படும்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் கட்டப் பணிகளுக்கான ‘‘பொது ஆலோசகர்கள்’’ 24.02.2009 அன்று தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஈஜிஸ் இரயில் (Egis Rail, France) என்ற நிறுவனத்தின் தலைமையில் 5 நிறுவனங்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு கூட்டமைப்பு, மெட்ரோ இரயில் திட்டத்திற்கான பொது ஆலோசகர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இக்கூட்டமைப்பின் பிற உறுப்பினர்கள் : (அ) ஈஜிஸ் இந்தியா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், இந்தியா , (Egis India Consulting Engineers Private Limited, India) (ஆ) மான்செல் கன்சல்டண்ட்ஸ் ஏசியா லிமிடெட், ஹாங்காங், (Maunsell Consultants Asia Limited, Hong kong) (இ) பாலாஜி இரயில் ரோடு சிஸ்டம்ஸ் லிமிடெட், இந்தியா (Balaji Rail Road Systems Limited, India) மற்றும் (ஈ) யாச்சியோ இன்ஜினியரிங் கோ லிமிடெட், ஜப்பான் (Yachio Engineering Co. Limited, Japan). சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான வடிவமைப்பு (Design), மேற்பார்வை (Supervision), தரக்கட்டுப்பாடு (Quality Control), பாதுகாப்பு (Safety) மற்றும் ஒப்பந்த

மேலாண்மை (Contract Management) ஆகியவற்றில் பொது ஆலோசகர்கள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கி உதவி செய்வார்கள்.

கோயம்பேட்டிலிருந்து அசோக் நகர் வரை 4.5 கி.மீ நீளமுள்ள உயர்த்தப்பட்ட வழித்தடம் கட்டுவதற்கான முதல் பணி ஒப்பந்தம் 13.2.2009 அன்று ஹைதராபாத்தைச் சேர்ந்த திருவாளர்கள் சோமா எண்டர்பிரைஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு ரூ.199.20 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டு நூறடி சாலையில் கோயம்பேடு (தெற்காசிய விளையாட்டு குடியிருப்பு எதிரில்), வடபழனி (ஓட்டல் அம்பிகா எம்பையர் எதிரில்) மற்றும் அசோக் நகர் (ஓட்டல் காரைக்குடி எதிரில்) ஆகிய இடங்களில் சாலையின் மத்தியப் பகுதியிலிருந்து ஐந்து மீட்டர் அகலத்திற்கும் 80 மீட்டர் நீளத்திற்கும் சோதனைக் குழிகள் தோண்டப்பட்டு மண் பரிசோதனைப் பணிகள் நடைபெற்றன. உயர்த்தப்பட்ட இரயில் பாதை அமைப்பதற்காக, தரையில் தாங்கு உருளைகள் (Pile) அமைக்கப்பட்டு, அதன் மேல் தூண்கள் (Pier) அமைக்கப்பட்ட பிறகு அதற்குமேல், இரயில் செல்வதற்கு பெட்டி வடிவ திராய்கள் (Box girder) அமைக்கப்படும். இதற்கான முதல் பணியான தாங்கு உருளைகள் (Piling work) அமைக்கும் பணியை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (10.6.2009) இயந்திரத்தை இயக்கி பணிகளைத் தொடங்கிவைத்தார்கள்.

இதே காலத்தில் தொடங்கப்பட்ட மற்ற மெட்ரோ இரயில் திட்டங்களோடு ஒப்பிடுகையில், திட்டத்திற்கான நிதியினை விரைவாகப் பெறுவதில் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் 12 மாதங்களில் ஜப்பான் அரசின் நிதி உதவியினையும் 14 மாதங்களில் மத்திய அரசின் நிதி உதவியினையும் பெற்று சாதனை புரிந்துள்ளது. மற்ற நகரங்களில் இதற்கு இரண்டரை ஆண்டுகளுக்கும் மேல் தேவைப்பட்டது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் இதே வேகத்தைத் தொடர்ந்து பின்பற்றி 2014–15ல் மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்தும். வேகமான, நவீனமான, செயல்திட்பமுடைய ஒரு போக்குவரத்து கட்டமைப்பு சென்னை மக்களின் நீண்டநாள் கனவாக உள்ளது. இக்கனவை நனவாக்கும் வகையில் மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்துவதில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் உறுதியாக உள்ளது.

(எஸ். கிருஷ்ணமூர்த்தி)
தலைமை மக்கள் தொடர்பு அலுவலர்